# சி.எஸ்.ஐ. தமிழ் திருச்சபை, அபுதாபி

# தூது
நற்செய்தி துணுக்குகள்



## அக்டோபர் 2023 (மடல் – 23) செய்தி - 10

**உம்முடைய வீட்டில் வாசமாயிருக்கிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் எப்பொழுதும் உம்மைத் துதித்துக்கொண்டிருப்பார்கள்.**

***சங்கீதம் 84:4***

# பொருளடக்கம்




| | |
|---|---|
| ஆயர் மடல் | 2 |
| ஆயரம்மா மடல் | 5 |
| பெண்கள் பகுதி | 7 |
| Children's Corner | 11 |
| வேத வினாக்கள் | 22 |
| கோதுமை மணி | 25 |
| துணுக்குகள் | 27 |
| ஆலய பக்கம் | 29 |

# ஆயர் மடல்

***ஆண்டவர் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கக் கண்டேன். அவருடைய வஸ்திரத்தொங்கலால் தேவாலயம் நிறைந்திருந்தது . (ஏசாயா 6:1(b)***

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே !

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துகிறேன். புதிய மாதத்துக்குள் பிரவேசிக்கக் கிருபைச் செய்த ஆண்டவரை ஸ்தோத்தரிக்கிறேன். நமது அபுதாபி, CSI தமிழ் திருச்சபையின் 23-வது ஆண்டுவிழாவை (Church Anniversary Day) மகிழ்ச்சியோடு கொண்டாட இருக்கிறோம். ஆண்டவர் நமக்குத் தந்த நல்ல திருச்சபைக்காகவும், அந்நிய தேசத்திலே ஆண்டைவரை வழிபடுகின்ற சூழலை நமக்குக் கொடுத்த ஆண்டவருக்கு நன்றி செலுத்தவும், ஆலயத்தை பற்றிய நமது பக்தி வைராக்கியத்தை வளர்த்துக் கொள்ளவும் அழைக்கப் பட்டிருக்கிறோம்.

ஏசாயா தீர்க்கன் தன் அழைப்பைப் பெற்ற காலத்தைச் சுட்டிக் காட்டுவதற்காக உசியா அரசன் மரித்த வருடம் என்கிறார். இது ஒரு வரலாற்றுக் குறிப்பு மட்டுமல்லாது, ஆலயம் நம் வாழ்களையோடு எப்படி இணைந்திருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்டுகிறது. தாவீது அரசனின் வழி மரபில் வந்த ஆற்றல் வாய்ந்த அரசருள் உசியாவும் ஒருவர். உசியா என்றால் **கர்த்தர் ஆற்றலானவர்** என்று பொருள். அவருடைய பெயருக்கேற்ப இறைவன் அவருக்கு வலிமையாகவும் துணையாகவும் இருந்தார். அரசை விரிவுப்படுத்த அவர் செய்த செயல்கள், கட்டடக் கலையிலும், வேளாண்மையிலும்காட்டிய ஆர்வம், அவருடைய படைபலத்தை உயர்த்தவும், சீரமைக்கவும், அவர் எடுத்த முயற்சிகள்யாவும் 2நாளாகமம் 26:1-15இல் சுருக்கமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஊசியா ஆண்டவருக்குப் பிரியமாக வாழ்ந்தான். கர்த்தரைத் தேடிய நாட்களில் எல்லாம் தேவன் அவர் காரியங்களை வாய்க்கப்பண்ணினார். ஆண்டவரின் ஆலய வழிபாட்டையும், அவரின் கட்டளைகளையும் மதிப்போர் பெருமை அடைகின்றார்கள். அவர்களின் வாழ்க்கை வளம் பெறும் என்கின்ற கொள்கைக்கு உசியா வாழ்க்கை ஓர் எடுத்துக்காட்டு.

அதேவேளையில் ஆண்டவரின் ஆலயத்தையும் அவரின் கட்டளைகளையும் மதிக்காதோர் வாழ்வு, எப்படி முடியும் என்பதற்கும் உசியாவே சான்று. வெற்றி நடைபோட்ட உசியா இறுதியில் தொழு நோயால் பீடிக்கப்பட்டான். உசியா ஆணவமிக்கவனாய் ஆசாரியர்கள் மட்டுமே ஆண்டவருக்குச் செய்கின்ற திருப்பணியை தான் அரசன் என்பதினாலே எடுத்துக் கொள்ள முயற்சி செய்தான். (2நாளாகமம் 26:16). ஆண்டவரின் ஆலயத்தில் தூபம் காட்ட முற்பட்டபோது ஆசாரியனாகிய அசரியா அவனைத் தடுத்தார். ஆசாரியனாகிய அசரியா அவரை அரசப்பட்டத்தைக் குறிப்பிடாமல் “ஓ உசியா” என்று அழைப்பது கவனிக்கத்தக்கது. குருக்களுக்கே உரிய திருப்பணியைத் தனக்கென எடுத்துக்கொண்டதால் அரசப் பதவிக்குத்

தகுதியற்றவனாகிறான். உசியா தேவனுடைய ஆலயத்தில் தூப பீடத்தின் முன் நிற்கிறபோதே அவனுடைய நெற்றியில் குஷ்டரோகம் தோன்றியது (2நாளா 26:19). ஆலயத்துக்குப் புறம்பாக்கப்பட்டு தனித்த வீட்டில் வாசம் பண்ணி, மரித்தப்பின்னும் ராஜாக்களின் கல்லறையில் அடக்கம் செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டான். ஆண்டவரையும், ஆலயத்தையும் அவரின் கட்டளையையும் மதியாதார் வாழ்வு என்ன ஆகும் என்பதற்கு உசியாவே சான்று.

### (a) ஏசாயா ஆலயத்தில் ஆண்டவரைக் காண்கிறார்:

தேவாலயம் ஆண்டவர் வசிக்கும் வீடு. சங்கீதக்காரன் சொல்கிறான், ***ஆண்டவரே நீர் குடிகொள்ளும் இல்லத்தையும், உமது மாட்சிமை தங்கியுள்ள இடத்தையும் நான் விரும்புகிறேன்*** என்கிறான். (சங்கீதம் 26:8) ஒரு மனிதனின் குடும்பத்தையும், அவன் வாழும் இல்லத்தையும் **"பெத்"** என்கின்ற எபிரேய வார்த்தையால் அழைப்பார்கள், இதற்கு **வீடு** என்று பொருள். எனவே கடவுள் தங்குகின்ற வீட்டைப் பெத்தேல் (பெத் - ஏல்) என்று திருமறை சொல்கிறது. ஆண்டவர் தங்குகின்ற அவருடைய வீடாகிய ஆலயத்தில் ஆண்டவரைக் காண்கிறார். அங்கு ஆண்டவா் அரசனைப்போன்று அமர்ந்திருக்கிறார். அவரின் மகிமையால் ஆலயம் நிறைந்திருக்கிறது. புகழ்ச்சியின் மத்தியில் வாசம் செய்யும் அவரைச் சேராபீன்கள் பரிசுத்தர் பரிசுத்தர், பரிசுத்தர் என்று சொல்கிறார்கள். எபிரேய மொழியில் உச்ச உயர்வை சுட்டிக் காட்டுவதற்கான (Superlative) சொல் கிடையாது. ஆகவே மூன்று முறை கூறுவதன் வழியாக ஆண்டவரின் உயர்வான நிலையையும், உலக முழுவதும் அவரின் ஆட்சி நிறைந்து இருக்கிறது என்பதன் வழியாக அவரின் ஆற்றலையும் ஏசா காண்கிறார். ஆண்டவர் வாழுகின்ற அவரது வீடாகிய ஆலயத்துக்கு வரும் பொழுதெல்லாம் அவரைக் கண்டு கொள்கிறோம், அவரைத் தரிசித்த அனுபவத்தையும் பெற்றுக் கொள்கிறோம்.

### (b) ஆலயத்தில் ஏசாயா தன்னைக் காண்கிறார்:

ஒரு வெள்ளை நிறத் துணியைத் தனியாகப் பார்க்கும்பொழுது வெண்மையாகத்தான் தோன்றும். ஆனால் அதை விட வெண்மையாக இருக்கின்ற துணியின் அருகில் வைத்துப் பார்க்கும் பொழுது தான் முதல் துணியின் அழுக்கும், கந்தையும் தெரியும். அதுபோலவே பரிசுத்த நிறைந்த ஆண்டவருக்கு முன்பாக வந்து நிற்கும் பொழுதுதான் நாம் எவ்வளவு அழுக்கானவர்கள் என்பது தெரிகிறது. அதுவரை தான் பரிசுத்தவான் என்று எண்ணிக் கொண்டிருந்த ஏசாயா தூய ஆண்டவரை ஆலயத்தில் தரிசித்த பின்புதான் தான் எவ்வளவு மோசமானவன் என்பதைக் கண்டு கொண்டார். தன்னுடைய பாவ நிலையை உணர்கிறார். சேராபீன்களோடு சேர்ந்து துதிக்க தான் தகுதியற்றவன் என்பதை எண்ணித் தன் இதயத்தில் குத்தப் பட்டவனாக அதமானேன் என்கிறார்.

ஆலயம் நம்மை ஆராய்ந்து பரிசோதித்துப் பார்க்கின்ற இடம் உண்மையாக தமது பாவத்துக்காக மனம் வருந்தி தம்மை தாழ்த்தி அர்ப்பணிக்கும் பொழுது ஆண்டவர்

நம்மை தூய்மையாக்குகிறார் (1யோவான் 1:9) பாவ மன்னிப்பு என்பது கடவுள் அருளும் கிருபை அதை அவரின் ஆலயத்தில் பெற்றுக் கொள்கிறோம்

(C) **ஆலயத்தில் ஏசாயா ஆண்டவரின் விருப்பத்தைக் காண்கிறார்:**

கடவுளின் திருச்சித்தத்தை நிறைவேற்றும் திருப்பணிக்கு மனிதர்கள் தேவை என்பதை இஸ்ரவேல் மக்களின் வரலாற்றிலும், புதிய ஏற்பாட்டிலும் காண்கிறோம். மனிதன் இல்லாமல் ஆண்டவரால் செயலாற்ற முடியாதென்பதல்ல, ஆனால் அவரின் திட்டத்தில் மனிதனின் பங்கை ஆண்டவர் எதிர்பார்க்கிறார். அதிலே அவரின் ஞானமும் கிருபையும் இருக்கிறது. எனவே யார் என் திருப்பணிக்காகப் போவார் என்கின்ற ஆண்டவரின் சத்தம் இன்றும் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. என்னை அனுப்பும் என்று அர்ப்பணிக்க அழைக்கப்பட்டி ருக்கிறோம்.

ஆண்டவரின் ஆலயத்தில் ஏசாயா தனது அழைப்பையும், பணியையும் உணர்ந்து கொண்டார். நம்மைச் சுற்றி எத்தனையோ மக்கள் இன்னும் ஆண்டவரை அறியாமலும், ஆலயம் இல்லாமலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த மக்களுக்கு ஆண்டவரின் அன்பை எடுத்துச் சொல்லவும் இறையரசுக்குள் அவர் களைக் கொண்டு வரவும் ஆண்டவர் நம்மை அனுப்பி இருக்கிறார். அவரின் அழைப்பை ஏற்கும் மக்களாக, நம்மை அர்ப்பணிக்கும் பொழுது, ஆண்டவர் நம்மைப் பலப்படுத்தி உபயோகிக்க வல்லவராக இருக்கிறார்

*Res. : 02 6791915*
*Mobile : 054 7401421*
*mail : asamuelrev@gmail.com*

***கிறிஸ்துவின் பணியில்***
***தங்கள் அன்பிற்குரிய ஆயர்***
Rev. Dr. A. Samuel

*கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!*

*நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.*

*கடந்த மாதம் முழுவதும் ஆண்டவர் நம்மையும் நம்முடைய குடும்பத்தையும் கண்ணின் மணி போல பாதுகாத்து நம் தேவைகள் எல்லாவற்றையும் சந்தித்து வழிநடத்தி வந்ததற்காக ஆண்டவருக்கு உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றி செலுத்துகிறேன் இந்த புதிய மாதமும் நமக்கு ஆசீர்வாதம் நிறைந்த மாதமாக இருக்க ஆண்டவர் அருள் செய்வாராக.* ***யாக்கோபே இஸ்ரவேலே இவைகளை நினை நீ என் தாசன் நான் உன்னை உருவாக்கினேன் நீ என்னால் மறக்கப்படுவதில்லை (ஏசாயா 44: 21).*** *ஏசாயா புத்தகத்தின் சிறப்பு திருமறைக்குள் திருமறை என்று சொல்வார்கள் ஏசாயாவில் 66 அதிகாரங்கள் உண்டு நம்முடைய திருமறையிலும் 66 புத்தகங்கள் உண்டு பழைய ஏற்பாட்டில் 39 புத்தகம் புதிய ஏற்பாட்டில் 27 புத்தகம் போன்று. ஏசாயாவில் 1 முதல் 39 அதிகாரங்கள் கடிந்து கொள்ளுவதும் கர்த்தரிடம் திரும்புவதற்கு அழைப்பதுமான தீர்க்கதரிசனங்கள் கடைசி 27 அதிகாரங்கள் தேற்றுகின்ற சமாதானத்தை கூறுகின்ற தீர்க்கதரிசனங்களாகவும் அமைந்திருக்கின்றன.*

*இந்த தீர்க்கதரிசன புத்தகத்தில் கூறப்பட்ட சில தீர்க்கதரிசனங்கள் சில ஆண்டுகளிலே நிறைவேறியதாகவும் வெகு காலத்திற்குப் பின் நிறைவேறியதாகவும் இன்னும் நிறைவேற போகிறவைகளாகவும் இருக்கிறது. இந்த 44 ஆம் அதிகாரம் முழுவதும் இஸ்ரவேல் ஜனங்களை குறித்து அவர்களுடைய சிலை வழிபாட்டின் அவல நிலையை குறித்தும் கூறிய கர்த்தர்.இஸ்ரவேலே கேள் பயப்படாதே என்னிடத்தில் திரும்பு என்று சொந்தம் பாராட்டி அவர்களை தே ற்றுவதை பார்க்கிறோம். இன்று உலகத்திலே மனிதர்கள் நட்பின் நிமித்தம் அன்பின் நிமித்தம் நம்மிடம் சொல்வதுண்டு நான் உன்னை மறந்தால் தானே நினைப்பதற்கு நான் உன்னை மறப்பதில்லை வானம் சூரியனை மறந்தாலும் மலர்கள் மனத்தை மறந்தாலும் நான் உன்னை மறப்பதில்லை என்றெல்லாம் கவிதையாக வர்ணிப்பவர்களும் உண்டு அவர்கள் சொல்லுகிற பொழுது எழுதி வாசிக்கின்ற பொழுது நமக்கு மகிழ்ச்சியை தரும் ஆனால் ஒரு சில நாட்களோ மாதங்களோ ஆனால் அவர்கள் என்ன ஆனார்கள் என்றே தெரியாது மறந்து விடுவார்கள் ஆனால் கர்த்தர் சொல்கிறார் நீ என் தாசன் நான் உன்னை உருவாக்கினேன் நீ என்னால் மறக்கப்படுவதில்லை என்று கூறுகிறார் உலக மக்கள் அதிகமாக மறக்கின்ற மூன்று காரியங்களில் தேவன் மறப்பதில்லை என்று வாக்கு கொடுக்கிறார்*

1. ***பாவத்தில் இருந்த போதும் மறக்கப்படுவதில்லை (சங்கீதம் 31.12)***

*செத்தவனை போல எல்லாராலும் முழுவதும் மறக்க பட்டேன் உடைந்த பாத்திரத்தை போல் ஆனேன் தாவீது தனது பாவத்தின் நிமித்தம் நோய் கொண்டு ஒடுங்கின போது துக்கத்தோடு சொல்லுகிறார். ஆனால் தாவீதை நினைவுகூர்ந்த கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசியாகிய நார்த்தான்வேலை தாவீதண்டை அனுப்புகிறார் நார்த்தான் பாவத்தை உணர்த்தி தாவீதோடு பேசியதால் தாவீது பாவங்களை அறிக்கையிட்டார் தேவனோடு ஐக்கியமானார் மறுபடியும் இருவருக்கும் இடையே அன்பு துளிர்த்தது கர்த்தர் தயைவுள்ளவர் காருண்யமுள்ளவர் அவர் நம்மை நினைத்து இருக்கிறார் அவர் மறப்பதில்லை. அநேகர் கர்த்தர் என்னை கைவிட்டார் ஆண்டவர் மறந்தார் நீங்க மறந்தா நாங்க எங்கே போவோம் இன்று புலம்புகிறார்கள். ஆனால் கர்த்தர் சொல்கிறார்,*

“ஸ்திரியானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இறங்காமல் தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும் நான் உன்னை மறப்பதில்லை இதோ என் உள்ளம் கையிலே உன்னை வரைந்திருக்கிறேன் உன் மதில்கள் எப்பொழுதும் என் முன் இருக்கிறது தாய் பிள்ளையை மறப்பாளா?” (ஏசாயா 49:15,16). ஆம் பிள்ளைகள் பாவத்தில் கீழ்ப்படியாமல் போகும்போது அநேக பெற்றோர் சொந்தப் பிள்ளையை நீ என் பிள்ளை என்று சொல்லாதே என்று மறக்கிறார்கள் பெற்றோர்கள் முதிர் வயதாகும் பொழுது பிள்ளைகள் பெற்றோரை மறக்கிறார்கள் ஆனால் நம்முடைய ஆண்டவர் நாம் எந்த பாவ நிலையில் இருந்தாலும் அவர் மறப்பதில்லை நீ என் தாசன் நான் உன்னை உருவாக்கினேன் நீ என்னால் மறக்கப்படுவதில்லை என்று சொல்கிறார்.

2. **வியாதி மற்றும் இல்லாமை வேலைகளில் மறக்கப்படுவதில்லை (யோபு19 :14)**

என் பந்து ஜனங்கள் விலகிப் போனார்கள் என் சிநேகிதர் என்னை மறந்து விட்டார்கள். வியாதி வெறுமையான வேலைகளில் உறவுகள் மறந்து போகலாம் யோபு மனைவியும் கூட அவரை கைவிட்டு நீர் இன்னும் உடைய உத்தமத்திலே உறுதியாய் நிற்கிறீரோ தேவனை தூசித்து ஜீவனை விடும் என்றாள். யோசுவா 1:5-ல் உடன்படிக்கை செய்த ஆண்டவர், “நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை உன்னை என்றும் கைவிடுவதுமில்லை” என்று சொன்னவர் மறக்காமல் நடத்துகிறார். இவ்வுலகத்தில் இருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்பு வைத்தபடியே முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில் அன்பு வைத்தார் (யோவான் 13:1). “எளியவன் என்றென்றைக்கும் மறக்கப்படுவதில்லை சிறுமைப்பட்டவர்களுடைய நம்பிக்கை ஒருபோதும் கெட்டுப் போவது இல்லை” (சங்கீதம 9:18). யோபு, வியாதி மற்றும் இல்லாமையால் எல்லாராலும் மறக்கப்பட்டாலும், ஆண்டவர் நினைத்தருளினார். இரட்டிப்பான ஆசிர்வாதத்தை பெற்றுக் கொண்டார்

3. **நன்மை செய்கிறவர்கள் மறக்கப்படுவதில்லை (ஆதியாகமம் 40 :23)**

பான பாத்திர காரனின் தலைவன் யோசேப்பை நினையாமல் அவனை மறந்து விட்டான். பானபா த்திரகாரனின் தலைவன் யோசேப்பின் கரத்தில் நன்மை பெற்றவன் மறந்துவிட்டான் .நாம் நம்பி நன்மை செய்த மனிதர்கள் மறக்கலாம் ஆனால் தேவன் நம்மை மறப்பதில்லை எபிரேயர் 6:10 உங்கள் கிரியையும் நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியம் செய்ததினாலும் செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காக காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்து விடுவதற்கு தேவன் அநீதி யுள்ளவர் அல்லவே நம்மிடம் நன்மை பெற்றவர்கள் சில நேரங்களில் மறந்து போகலாம் இவர்களைத் தெரியாது என்று கூட சொல்லலாம் ஆனால் தேவன் மறந்துவிடுவதற்கு அநீதியுள்ளவர ல்லவே அவர் நீ என் தாசன் நான் உருவாக்கினேன் நீ என்னால் மறக்கப்படுவதில்லை என்று நமக்கு வாக்கு பண்ணியிருக்கிறார் இந்த மாதத்திலும் இந்த வார்த்தையின் படி நாம் விசுவாசத்தில் நம்பிக்கையோடு இருப்போம் கர்த்தர் நம்மையும் நம்முடைய குடும்பத்தையும் மறவாமல் ஆசீர்வதித்து வழி நடத்துவாராக.

**மீட்பரின் பணியில்**
*Mrs. S.* **ஜெபா சாமுவேல்**
**ஆயரம்மா**


## இயேசுவின் சத்தம் கேட்டு சித்தம் செய்ய ஆயத்தமா?

ஒவ்வொரு பெற்றோருக்கும், தங்கள் பிள்ளைகளை எப்படியாவது ஒரு தரமுள்ள கல்வி நிறுவனத்தில் சேர்த்து, பிள்ளையின் திறமைக்கு ஏற்ப உயர்தர கல்வி தர வேண்டும் என்பதே முக்கியமான நோக்கமாயிருக்கும். நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும், தம்முடைய சாயலாக படைத்த நம்மை, அவருடைய சித்தத்தின்படி இவ்வுலகில் வாழ்ந்து, மறுமையில் நித்திய நித்தியமாய் அவரோடு சேர்ந்து வாழ வேண்டும் என்ற நோக்கத்தோடே படைத்துள்ளார். இவ்வுலகில் அவரின் சித்தம் நிறைவேற்றாது, மறுமையில் நாம் அவருடன் வாழ முடியாது. அவர் சித்தம் நிறைவேற்ற அவர் சத்தம் நாம் கேட்க வேண்டும்.

### ஆவியானவரின் சத்தம் கேட்ட தேவ மனிதர்கள்

பழைய ஏற்பாட்டு காலத்தில், கர்த்தர் தரிசனமாகவோ, முக முகமாகவோ, ஆவியானவர் மூலமாகவோ தம் மக்களை போதித்து நடத்தினார். தான் தெரிந்து கொண்ட மக்கள் தன்னுடைய பணியை திறம்பட செய்து முடிக்க ஒரு ஆசிரியராக இருந்து கற்றுக்கொடுத்தார்.

### பெசலெயேல்




ஆண்டவர் பெசலெயேலை பேர் சொல்லி அழைத்து, ஞானத்தையும் புத்தியையும் அறிவையும் அருளி, ஆசரிப்புக் கூடாரத்தின் சகல வித வேலைகளையும் செய்யும்படிக்கு, அவனை தேவ ஆவியினாலே நிரப்பினார் [யாத்.35:30-35]. பெசலெயேலுக்கும் அகோலிபாவுக்கும் ஞானத்தை போதிக்கும் வரத்தையும் அருளினார் என்று கூறப்பட்டுள்ளது. அவர்கள் இருவரும் கர்த்தர் கொடுத்த கட்டளைப்படி அனைத்து காரியங்களையும், ஞானத்தால் நிரப்பப்பட்ட மற்றவர்களையும் கொண்டு அழகாக செய்து முடித்தனர். வாசல்கள், தூண்கள், திரைகள் என ஒவ்வொன்றும் எவ்வாறாக இருக்க வேண்டும் என்பதையும், அவைகளின் அளவு, உபயோகப்படுத்த வேண்டிய பொருட்கள் அனைத்தையும் கர்த்தர் அழகாக போதித்தார். அனைத்தும் அவர் சொற்படி நடந்து முடிந்தது.

- கர்த்தரின் சத்தம் கேட்டு அதன்படி செய்த பெசலெயேல் மூலம் அழகான ஆசரிப்புக் கூடாரம் உருவானது. கர்த்தரை ஜனங்கள் ஆராதிப்பதற்கு பெசலெயேலின் கீழ்ப்படிதல் உதவினது.

### நோவா

நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தான். அவன் தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருந்தான் (ஆதி.6:9). தேவன் மக்கள் செய்யும் தவறுகளையும், அதினால் அவர்களை அழிக்கத் திட்டமிட்டதையும் நோவாவுக்கு வெளிப்படுத்துகிறார். நோவாவையும், அவன் குடும்பத்தையும், மற்ற ஜீவ ஜந்துக்களையும் காப்பாற்ற பேழையை எவ்வாறு செய்ய வேண்டும் என்பதையும்

மிகவும் துல்லியமாகப் போதிக்கிறார் தேவன் (ஆதி.6:13-21). நோவா தேவன் தனக்கு கட்டளையிட்டபடியெல்லாம் செய்து முடித்தான் (ஆதி.6:22). நோவா அதுவரை மழையையோ, பேழையையோ பார்த்தில்லை. ஆனால், தேவன் தனக்கு கட்டளையிட்டது, தன் ஞானத்திற்கு எட்டாததாய் இருந்தாலும், விசுவாசித்து நூற்றுக்கு நூறு கீழ்ப்படிந்தான்.



- கர்த்தரின் சத்தத்திற்கு அடிபணிந்ததினால், 40 நாட்கள் விடாது பெய்தது மழை. மற்ற ஜனங்களை மூழ்கடித்த தண்ணீர், நோவாவின் குடும்பத்தை பேழையோடு உயர்த்தி காத்துக்கொண்டது!

### சகேயு



ஐசுவரியவானும் ஆயக்காரனுமாயிருந்த சகேயு, இயேசு எப்படிப்பட்டவரோ என்று அவரைக் காண ஆவலாய் இருந்தார். இயேசுவானவரின் போதனைகளையும் அவர் செய்யும் அற்புதங்களையும் குறித்து அவர் கேள்விப் பட்டிருக்க வேண்டும். கூட்டத்தில் அவரைக் காண முடியாததால் ஓடிச் சென்று காட்டத்தி மரத்தில் ஏறினான். அப்போது அவனைக் கண்ட இயேசு அவனை சீக்கிரமாய் இறங்கி வரும்படி கூறி, அவன் வீட்டில் தங்க வேண்டும் என்று கூறுகிறார். சகேயு நிச்சயமாகவே இதை எதிர்ப்பார்த்திருக்க மாட்டார். சந்தோஷத்தோடு இயேசுவை அழைத்துச் சென்ற சகேயுவின் வாழ்வில் நடந்த மாற்றம் (லூக்கா 19), நாம் அனைவரும் அறிந்ததே. இங்கு இயேசுவானவர் எதுவும் போதித்ததாக கூறப்படவில்லை. இயேசுவின் பிரசன்னம் சகேயுவின் பாவத்தை உணர்த்த போதுமானதாயிருந்திருக்கக் கூடும்.

போதகரான, ஆலோசனைக் கர்த்தாவாகிய இயேசுவை நம் வாழ்வில் நாம் கண்டு கொண்டால், சகேயுவின் வீட்டிற்கு சென்று தங்கியதைப் போல நம் உள்ளத்திலும் தங்குவார் நிரந்தரமாக. அப்போது பாவக்கறைகள் அனைத்தும் கழுவப்பட்டு நம் இருதயம் சுத்தமாகும். போதிக்கும் இயேசுவின் சத்தத்தைக் கேட்க நம் செவிகள் திறந்திருக்கும். அப்பொழுது, அவர் சத்தத்திற்கு கீழ்ப்படிந்து அவர் சித்தம் செய்ய நம்மால் முடியும்.

நேற்றும் இன்றும் என்றும் மாறாத இயேசு கிறிஸ்து, இன்றைய தினத்திலும் பரிசுத்த ஆவியானவராக நம்மோடு இருக்கிறார். நமக்கும் இயேசுவுக்கும் உள்ள ஐக்கியம் சரியாக இருக்கும்போது, 'வழி இதுவே, இதிலே நடவுங்கள்' என்று சொல்லும் கர்த்தருடைய ஆலோசனையை, நாம் வலது இடது புறம் சாயும்போது கேட்க முடியும் (ஏசாயா 30:21). நல்ல ஆசிரியராகிய இயேசு கிறிஸ்து, அவர் சித்தத்தின் படி வாழ நம்மனைவருக்கும் கிருபை செய்வாராக!

**ஜெபசீலி ஆசீர்**

## வேதாகமப் பெண்கள்

### பிரிஸ்கில்லா

(அப்போஸ்தலர் 18; ரோமர் 16: 3-5, 1 கொரி. 1:19, 2 தீமோ. 4:19)

**ஆக்கில்லா, பிரிஸ்கில்லா - யார்?**

ஆக்கில்லா பொந்து தேசத்தை சேர்ந்த ஒரு குடிபெயர்ந்த யூதர். பிரிஸ்கில்லா ரோமப் பெண்மணி. பிரிஸ்கில்லா என்றால் 'தகுதியான' என்று அர்த்தம். இவர்கள் இத்தாலி தேசத்தில் வாழ்ந்து வந்தார்கள். இவர்கள் தொழில், கூடாரம் பண்ணுவது. இவர்கள் பவுல் அப்போஸ்தலனோடு இணைந்து சுவிசேஷப் பணி செய்தார்கள். தங்கள் இல்லத்தைப் பவுலுக்கு திறந்துக் கொடுத்தார்கள். பவுலும் இவர்களோடிணைந்து கூடாரத் தொழிலும் செய்தார்.

**கணவன், மனைவி இணைந்து செயல்படுதல்**

இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழ்ந்தனர். தேவ ஊழியத்தை இணைந்தே செய்தனர். இவர்களை சுவிசேஷத்தின் பங்காளிகள் எனலாம்.

**ஊழியக்காரரை ஏற்றுக்கொண்ட தம்பதியினர்**

ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாவும் தாங்கள் வைக்கப்பட்ட சூழ்நிலையிலேயே தேவனுக்கு ஊழியம் செய்தார்கள். கொரிந்து பட்டணத்தில் ஊழியம் செய்ய வந்த பவுலை ஏற்றுக்கொண்டனர். இதை நாம் ரோமர் 6:3,4-ல் பார்க்கிறோம். பிற மக்கள் கிறிஸ்துவில் வளர உறுதுணையாக இருந்தனர். பவுல் கூறும்போது, "என் பிராணனுக்காக தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்கள்" என்று கூறுகிறார். கொரிந்துவிலும், ரோமாபுரியிலும் சாட்சியாக வாழ்ந்தனர். அநேக மக்கள் கிறிஸ்துவுக்குள் வளர உறுதுணையாக இருந்தனர்.

ரோமரல்லாத யூதர்கள் ரோமாபுரியை விட்டு புறப்படக் கட்டளை பிறப்பிக்கப்பட்டபோது, யூதனான தனது கணவருடன், தேவன் இணைத்த வாழ்வை சமுதாயமோ, அந்தஸ்தோ, சிலாக்கியங்களோ, சட்டங்களோ, கட்டளைகளோ குறுக்கிட்டு பிரிக்க பிரிஸ்கில்லா இடம் கொடுக்கவில்லை. விசுவாச வாழ்வில் பெலப்பட்டு சுடரைப் போல உலகில் பிரகாசித்த பெண்மணியாக காணப்பட்டாள்.

எந்த சூழ்நிலையிலிருந்து நாம் வந்தவர்களாயினும், எப்பேர்பட்ட குடும்ப பாரம்பரியத்தை உடையவர்களாயினும், கணவனுடன் இணைந்து செயல்பட, தேவன் விரும்பும் ஒரு இல்லறத்தை அமைக்க, வேண்டிய தியாகத்தை செய்ய, முன் வரவேண்டும்.

இவர்களது வாழ்வு நமக்கு சவால் தான். கிறிஸ்துவின் ஒளியைப் பெற்ற குடும்பம். நாமும் கூட கிறிஸ்து நமக்காக பரலோக மேன்மையை துறந்தது போல விட்டுக் கொடுப்போம், இணைந்து ஊழியம் செய்வோம். கணவனுக்கு, வீட்டினருகே கனிதரும் திராட்சைக் கொடியாய், சமுதாயத்திற்கு பிரயோஜனமுள்ளவர்களாய் வாழ்வோம்.

பிரிஸ்கில்லா மற்றவர்களுக்கு போதிப்பதில் ஆசிரியராக காணப்பட்டது போல நாமும் பிறர் கிறிஸ்துவுக்குள் வளர முயற்சி செய்வோம்! வழி காட்டுவோம்!

**திருமதி. ஷர்மிளா ராஜேஷ்**

## நவம்பர் மாத தலைப்பு


# கிறிஸ்தவ ஈகை

# [Christian Giving]

# CHILDREN'S CORNER

Dear Children,


The theme for the month of October is – "**JESUS IS THE BEST TEACHER**".




Jesus began preaching when he was about 30 years old.

He taught people to forgive others, to live a good life, and to honor God so as to enter God's kingdom. He often taught by using parables, or short stories that illustrated his message.

**WHY WAS JESUS A GREAT TEACHER?**




1. He loved People – Adults; kids. Once he esp. asked his disciples to bring the little children to Him.
2. He knew how to make things interesting to listen – he used simple words and spoke in parables (stories).
3. He made use of every opportunity he got to teach others – on the boat; in houses; on the mountain side.
4. He spoke what he learnt from his Father in heaven.




**WHEN JESUS FINISHED TALKING, WHAT DID THE PEOPLE THINK?**

The Bible says that they were **AMAZED** at His way of teaching.

It was very interesting to listen to Him.

What He said helped people to do what is right.—Matthew 7:28.

# JESUS TAUGHT WITH SIMPLE WORDS




## DID YOU KNOW...?

**Of the 90 times Jesus was addressed directly in the gospels, 60 times he was called Teacher.**
**This was the word the multitudes used.**
**This was how the disciples referred to him.**
**Jesus himself used the term when he said, "You call me Teacher and Lord, and rightly so, for that is what I am" (John 13:13).**



# SAYING IT WITH PICTURES...




I tell you the truth, whoever hears my word and believes him who sent me has eternal life and will not be condemned; he has crossed over from death to life. – John 5:24 NIV




Here I am! I stand at the door and knock. If anyone hears my voice and opens the door, I will come in and eat with that person, and they with me. — Revelation 3:20 NIV

## TINY TOTS SECTION

### COLOR IN…


**JESUS TAUGHT ABOUT GOD'S LOVE**



Copyright ©Sermons4Kids I All Rights Reserved I www.sermons4kids.com


**Once When Jesus Was Only 12 Yrs. Old, His Parents Couldn't Find Him. They Later Found Him Teaching in The Temple.**





**A well-known parable Jesus taught is about THE PRODIGAL SON. Watch the story here! Then complete the questions on the side.**

**Jesus taught that the Kingdom of Heaven was like a man who discovered a treasure in the field. He sold all he had, and went back to buy that field. Match the treasure to the shadow.**










**After Raising from the Grave, Jesus Taught the Emmaus Disciples That What the Bible Told Long Ago, Had Been Fulfilled!**

# OLDER CHILDREN SECTION

## CHOOSE THE CORRECT OPTION – TEACHINGS and PARABLES OF JESUS

1. The Sermon on the Mount can be found in which book?

a. Matthew 5:1 to 7:29 b. Luke 7:1 to 9:62
c. Mark 2:1 to 4:41 d. John 5:1 to 7:53

2. Blessed are the _____: for theirs is the kingdom of heaven.

a. Meek b. Poor in Heart
c. Merciful d. Poor in Spirit

3. Blessed are the _____: for they shall be called the children of God

a. Meek b. Poor in Heart
c. Merciful d. Peacemakers

4. Christ said He came to _____ the law

a. Destroy b. fulfill
c. Add to d. change

5 Ye are the _____ of the earth.

a. Salt b. Pepper
c. Strength d. Foundation

6. Where should we lay up our treasures?

a. In the bank b. In your house
c. In a safe place d. In heaven

7. For where your treasure is, there will your ____ be also.

a. Heart b. Mind
c. Hope d. Trust

8. In the parable of the sower, the seed represents______________?

a. People b. God
c. World d. God's Word

9. In the parable of the hidden treasure, what does the treasure represent?

a. Kingdom of Heaven b. Wealth of the World
c. Success in Life d. God seeking the Lost

10. Which parable tells us about the Father's Love?

a. The parable of the Prodigal son b. The parable of the Talents
c. The parable of the Sower d. The parable of the mustard seed

11. Which parable tells us how to treat others?

a. The parable of the Prodigal Son b. The parable of the Talents
c. The parable of the Good Samaritan d. The parable of Hidden Treasure

12. Who tells Jesus what to say, and what to speak? (John 12:49)

a. Heavenly Father b. Scriptures c. His parents d. The angels

# SERMON ON THE MOUNT

## The Sermon on the Mount

*Matthew 5:21—7:23*

Conventional Wisdom vs. Jesus' Wisdom

| Conventional Wisdom | Jesus' Wisdom |
|---|---|
| Don't murder | Don't be angry with others 5:21–22 |
| Don't commit adultery | Don't lust 5:27–28 |
| A man who divorces his wife must give her a certificate of divorce | Divorce is only valid in cases of sexual immorality 5:31–32 |
| Don't break oaths | Don't make oaths; yes or no should suffice 5:33–37 |
| Give an eye for an eye, a tooth for a tooth | Don't resist an evil person; turn the other cheek 5:38–42 |
| Love your neighbor and hate your enemy | Love your enemies 5:43–47 |
| Give to the needy publicly | Give to the needy in secret 6:1–4 |
| Pray wordy prayers in order to gain attention | Pray humbly, in secret 6:5–8 |
| Fast in public | Fast in secret 6:16–18 |
| Store up treasure on earth | Accumulate treasures in heaven 6:19–21 |
| Worry in order to solve problems | Don't worry; seek God's kingdom first 6:25–34 |
| Concentrate on the sins of others | Deal with your own sin before focusing on the sins of others 7:1–5 |
| The majority is always right | The majority won't make it into heaven 7:13–14,21–23 |
| Believe and teach what you want as long as you love God | Watch out for false prophets and obey God 7:15–23 |

## Read Jesus' words.



First write all of the words numbered "1" in order. When you reach the last 1, return to the top of the chart and write all of the "2" words in order. Return to the top of the chart to start each new number.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 Blessed | 2 God | 3 Blessed | 4 you | 5 and | 1 are | 2 Blessed | |
| 3 are | 4 when | 5 reject | 1 you | 2 are | 3 you | 4 men | 5 your |
| 1 who | 2 you | 3 who | 4 hate | 5 name | 1 are | 2 who | |
| 3 weep | 4 you | 5 as | 1 poor | 2 hunger | 3 now | 4 when | 5 evil |
| 1 for | 2 now | 3 for | 4 they | 5 because | 1 yours | 2 for | |
| 3 you | 4 exclude | 5 of | 1 is | 2 you | 3 will | 4 you | 5 the | 1 the |
| 2 will | 3 laugh | 4 and | 5 Son | 1 kingdom | 2 be | 3 Blessed | |
| 4 insult | 5 of | 1 of | 2 satisfied | 3 are | 4 you | 5 Man | |




"____ ____ ____ ____ ____ ____, ____ ____ ____ ____ ____ ____ ____.

____ ____ ____ ____ ____ ____, ____ ____ ____ ____ ____ ____ ____.

____ ____ ____ ____, ____ ____ ____ ____ ____. ____ ____ ____ ____ ____ ____, ____

____ ____ ____ ____ ____ ____ ____ ____ ____ ____, ____ ____ ____ ____ ____."


Complete the maze, picking up the letters as you go. Place the letters in order as you come to them and put them in the blanks below to complete today's memory verse.







Jesus Christ is the _ _ _ _ _ yesterday and _ _ _ _ _ _ and _ _ _ _ _ _ _ _ _ _. Hebrews 13:8

## SOME TEACHINGS OF JESUS…




**The Kingdom of Heaven belongs to such as these…**






My name is ______________________




Two of John's disciples follow Jesus to his home so that they can learn from him. What Jesus teaches them is so powerful that they go and tell others to follow Jesus too.

# LEARN FROM JESUS

Jesus invites the two disciples to come and see where he lives.

Can you help them find the way to his home?



## A new name!

When Jesus saw Simon, he gave him a new name. Follow the line to find out what Jesus called him. _ _ _ _ _ _




## Learn from others

The disciples followed Jesus because they wanted to learn from him.

Fill in the missing letters to find some people you can learn from.




## Jesus' names

Can you find some of the names Jesus was known by?

MESSIAH
CHRIST
PROPHET
LAMB OF GOD
LORD
JESUS
RABBI
SON OF GOD

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| L | A | M | B | O | F | G | O | D | T |
| O | J | E | S | U | S | H | H | E | R |
| R | R | S | O | N | O | F | G | O | D |
| D | O | S | C | H | J | S | D | M | E |
| R | O | I | P | R | O | P | H | E | T |
| I | R | A | B | B | I | L | H | P | H |
| T | C | H | R | I | S | T | I | S | A |

## A PRAYER TO SAY

Dear Jesus, thank you for being such a good teacher and for teaching us all about God the Father. I promise to listen to you always and to try to do as you say. Amen

## TEEN THOUGHT: FOLLOWING in the Teacher's Footsteps

Some accept the invitation to teach enthusiastically, while others do so more reluctantly.

Teaching is a great responsibility; one which paradoxically enriches your own growth as you lead others in their growth.

God does not call us and then leave us alone. "I will teach you what you shall do" - HE says. (Exodus 4:15).

**SOWING THE SEED**

An angel paused in his onward flight,
With a seed of love and truth and right,
And said, "Oh, where can this seed be sown
That it yields more fruit when fully grown?"

"To whom can this precious seed be given
That it bears more fruit for earth and heaven?
"The Savior heard and said as He smiled
"Place it at once in the heart of a child."

The angel whispered the blessed truth
To a weary teacher of precious youth;
Her face grew bright with heavenly light
As she led their thought in the way of right.

And we have the promise of the Holy Spirit as well, ". . . I will ask the Father, and he will give you another Advocate, to be with you forever" (John 14:14-16). Will you heed the Teacher's call today?

## Hope You Enjoyed All the Activities. Complete The Short Review Below...

1. The theme for the month of October is: ______________________________.
2. Why was Jesus a great Teacher? i. ________________________________________

   ii. ________________________________________

   iii. ________________________________________

   iv. ________________________________________
3. When Jesus finished talking, what did the people think? ____________________.
4. John 13:13 - ____________________________________________________________

   ____________________________________________________________

Children, Jesus walked the Earth, and taught us how to live by His words, His actions and His life. Ask the Holy Spirit to empower you to follow Jesus' example, and live in accordance with the Father's will.

God bless,

**Mrs. Briliya Jeyaseelan.**

## Answers to September Children's Corner

**CHOOSE THE CORRECT OPTION – How well do you know about JESUS' earthly family from the Gospels!**

1. d. 4
2. d. James
3. b. John the Baptist
4. c. Zachariah
5. a. Elizabeth
6. d. Peter
7. b. Grace
8. b. Joseph and Mary
9. d. Jacob and Matthan.
10. a. Those who do the Will of God

## Short Review Below...

1. The theme for the month of September is: **Christian Family**.
2. A Christian family is a family built on **Jesus Christ**.
3. Judges 2:7 says **- And the people served the LORD all the days of Joshua.**
4. God uses the **family** unit to transmit His knowledge from one generation to the next and be "salt" and "light" in the world.

***Note : Submit the answers of Bible Quiz to Pastor uncle or aunty on or before 25th of every month.***

# வேத வினாக்கள்

## லேவியராகமம் முழுவதும்

(அனைத்து கேள்விகளுக்கும் சரியான விடையை திருமறை ஆதாரத்தோடு எழுதவும்)

1.ஆசாரியர்கள் எத்தனை நாள் பிரதிஷ்டை பண்ணப்பட வேண்டும்?
2.ஆரோனின் சித்தப்பா பெயர் என்ன?
3.யார் ஏறும் எந்தச் சேணமும் தீட்டாயிருக்கும்?
4.குஷ்டம் நீங்க எந்த இரத்தத்தை ஆசாரியர்கள் தெளிக்க வேண்டும்?
5.சரீரம் முழுவதும் குஷ்டம் மூடியிருந்தால் அவனை எப்படி தீர்க்க வேண்டும்?
6.தரையில் ஊரும் பிராணிகளால் எது தீட்டுப்படாது?
7.தோஷம் வீட்டில் படர்ந்தால் அது என்ன குஷ்டம்?
8.எதனுடைய கொழுப்பை புசிக்கக் கூடாது?
9.இராமுழுவதும் விடியற்காலம் மட்டும் பலிபீடத்தின் மேல் எது எரிய வேண்டும்?
10.பலிபீடத்தின் மேல் எவைகளை சுகந்த வாசனையாகத் தகணிக்கக் கூடாது?
11.யூபிலி வருஷம் மட்டும் சேவிக்கக் கடவன் யார் ?
12.செய்யாதே. அஞ்சாதே. எதற்கு? ஏன்?
13.கொடுக்கப்பட்டது எது?
14.கொடுப்பார்கள். எதை?
15.கொடுக்காதே. எதற்கு? எதை?
16.ஐம்பது சேக்கலாக மதிக்கப்பட வேண்டும் எது?
17.பாவ நிவர்த்திக் கென்று நியமிக்கப்பட்ட காளை எங்கே கொல்லப்பட வேண்டும்?
18.இரும்பு, வெண்கலம் எதற்கு உவமைப்படுத்தப்பட்டுள்ளது?
19.ஐந்து பேர் நூறு பேரையும், நூறு பேர் பதினாயிரம் பேரையும் துரத்தும் ஆசீர்வாதம் பெற்றவர்கள் யார்?
20.சர்வாங்க தகன பலிக்கான கடா எந்த திசையில் கொல்லப்பட வேண்டும்?

**குறிப்பு :**

- அனைத்து கேள்விகளுக்கும் பதில் அளிக்க வேண்டும்.
- அந்தந்த மாதத்திற்குரிய வேத வினாக்களின் பதில்களை அந்தந்த மாதத்தில், 25-ம் தேதிக்குள் எழுதி ஆயரிடம் அல்லது ஆயரம்மாவிடம் ஒப்படைக்கவும்.

## செப்டம்பர் - 23 - வேத வினா விடைகள்

| கேள்வி எண் | பதில் | திருமறை ஆதாரம் யாத்திராகமம் |
|---|---|---|
| 1 | கர்த்தர் | 15:3 |
| 2 | சிப்போராள் | 4:25 |
| 3 | ஏலிம் – சூர் வனாந்திரம் | 15:22,27 |
| 4 | எகிப்தியர் | 15:10 |
| 5 | சாயங்காலம் | 12:6 |
| 6 | எகிப்தியரின் சேனை | 14:24 |
| 7 | மலையில் தேவனுக்கு ஆராதனை செய்வது | 3:12 |
| 8 | கடற்கரையிலே | 14:30 |
| 9 | ஆழி | 14:28 |
| 10 | தேவ பர்வதம் | 4:27 |
| 11 | உருட்சியான ஒரு சிறிய வஸ்து | 16:14 |
| 12 | கல்லின் மேல் | 17:12 |
| 13 | இரட்டிப்பாய் | 22:4 |
| 14 | சாட்சி பிரமாணத்தை | 25:16 |
| 15 | கர்த்தருக்கு பரிசுத்தம் | 28:36 |
| 16 | ஆரோன் | 29:5,6 |
| 17 | கர்த்தர் | 20:22,21:31 |
| 18 | பதினொன்று | 26:7 |
| 19 | பதினைந்து | 26:26-28 |
| 20 | பசும் பொன் தகட்டால் | 30:1,3 |
| 21 | பெசலெயேல் | 31:2,5 |
| 22 | பூத்தியேல் | 6:25 |
| 23 | கோதுமையும் கம்பும் | 9:32 |
| 24 | எகிப்தியர் | 7:5 |
| 25 | கோசேன் நாட்டை | 8:22 |

### செப்டம்பர் மாத வேத வினாக்களுக்கு பதிலளித்தவர்கள்

1. Mrs.Jebaseeli Asir
2. Mrs.Jenila Gnanaraj
3. Mrs . Sharmila Rajesh
4. Mrs .Priya Ranjith Kumar
5. Mrs. Febell Jeevagi Thomas
6. Mr. Jeba Jino
7. Mrs.Geetha kannan
8. Mr.Salin Robert
9. Mrs.Sheeba Herlin
10. Mr. Prawin Durai Sam
11. Mrs. D.R Ajita Ebi
12. Mrs.Annie max
13. Mr.Emmanuel
14. Mr.Ashok . s
15. Mrs. Abisha Grace Rejin
16. Mrs. G. Sheeba Merlin
17. Mrs. Subija Jino

## Children who answered September - 2023 Quiz

1. Kavi Yalini
2. Kevin Immanuel
3. Leona Juliet J.B
4. Jevlyn Ana .V
5. Johan Anit Manuel
6. Johan Sam Manuel
7. Adelyn Victoria Jeyaseelan
8. Hadriel Yuuesh Roy
9. Janey JessicaTitus
10. Jared Isaac Johnson
11. Jebessa Johnson
12. Jarick Aaron
13. Josiah Sekar
14. Evelyn Grahwa
15. Evelyn Gracia
16. Hadrie Adventier
17. Elize Gloro Alrred
18. Starlyne Noble
19. Jerilyn Pushpam Nelson
20. Galvin Robert .S
21. Camryn Robert. S
22. Giana Elin
23. Liana Erin
24. Jen Scudd
25. Jim Scott
26. Gabrilyn Hannah
27. A.Darion Lemuel
28. Steffi Prisilla
29. Aadhav Steve Matthew
30. Janessa max
31. Karen Tryphena Grapeson
32. Joanna Paul Jino
33. Johanan paul Jino

# கோதுமை மணி

## அருட்திரு. Sr. ஈடித் பெல் மார்கன்



**இந்திய மண்ணின் விடுமுறை வேதாகமப் பள்ளியின் முன்னோடி**

**14-06-1912 – 20-01-1997**

### திருநெல்வேலி ஊழிய அடித்தளம்

பாளையங்கோட்டை வந்தடைந்த ஈடித்தை, திருநெல்வேலி அத்தியட்சாதீனத்தின் அப்போதைய பேராயர் மகாகனம் ஜெபராஜ் அவர்கள், பேருவகையுடன் வரவேற்று சாராள் தக்கர் பள்ளியில் தங்குவதற்கான ஏற்பாட்டையும் செய்து கொடுத்தார். ஈடித் சாராள் தக்கள் பள்ளி வளாகத்தில் குடியேறும்போது, அவர் கேட்டபடியே தேவன் பாக்கியையும் லீலாவையும் கொடுத்தார். லீலா வேதமணி ஈடித்துடன் முழுநேரமாய் இணைந்தார். அவரைத் தொடர்ந்து பாக்கியத்தாய் பிச்சமுத்து முழுநேரமாய் இணைந்தார்.

மிகப்பெரிய வெராண்டாவுடன் கூடிய ஓரறைத் தங்குமிடத்தை, முரடான தொங்கு திரைகளைப் போட்டு நவநாகரீக அறைகளுள்ள புதுமை வீடாக்கினார் ஈடித். வசதிக்குறைவு ஒரு பொருட்டாயில்லை இம்மூவருக்கும். தேவன் சொல்லும் காரியத்தைச் செய்யும்போது நெஞ்சை ஆளும் சமாதானமும் ஓங்கும் பிணைப்பும் இவர்கள் மத்தியில் தாய் சேய் என்ற பாசத்தில் மலர்ந்தது.

லீலா தேவமணி, ஆசிரியர் பயிற்சிபெற்று பத்தாண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றியவர். இந்திய மண்ணில் VBS அறிமுகமான பொன்னான காலகட்டத்திலேயே ஆசிரியர் பணியை ராஜினாமா செய்துவிட்டு ஈடித் வேலைபார்த்த, பி.சாமுவேல் பயின்ற, SIBI (SIBS)-ல் வேதாகமக் கல்வி கற்று

முடித்திருந்தார். பாக்கியத்தாய் பிச்சமுத்துவும் அவரைத் தொடர்ந்து பங்காரப்பேட்டையில் வேதாகமக் கல்வி பயின்றார்.

லீலா ஆழமான அர்ப்பணிப்புள்ளவர். எல்லாரிடமும் சரளமாகப் பழகும் லீலா எப்போதும் சந்தோஷமாயிருப்பார். அவரது புன்முறுவல் அவரது விலைமதிப்பற்ற பொக்கிஷம். பாக்கித்தாய் பயந்த சுபாவம் உள்ளவர். ஆண்டவர் மேலுள்ள அன்பு அளவிட முடியாததாயிருந்ததால், ஊழியமே என் மூச்சு என்று அமரிக்கையோடு ஆர்ப்பரிப்பார். அவரது அமரிக்கையான சுபாவம் அவரது அலங்காரம். கசாப்புக் கடைக்காரரான தந்தை பிச்சைமுத்து, முதலில் ஊழியத்துக்கு மறுப்பு தெரிவித்ததால், வீட்டை விட்டு வெளியேறி கத்தோலிக்க கன்னியர் மடத்தில் சேர்ந்து விட்டாராம் பாக்கித்தாய். அவரது அண்ணன் ஒருவர் தேடிக் கண்டுபிடித்து மீண்டும் வீட்டிற்குக் கொண்டு வந்தாராம்.

**ஈடித் தாயாரின் மறைவு**

இப்படி இம்மூவரும் பாளையங்கோட்டை (திருநெல்வேலி) VBS-க்கான நங்கூரம் பாய்ச்சிய 1956-ல் தானே ஈடித்தின் தாய் ஐடா பெர்ல் மார்கன் கர்த்தரின் ராஜ்யம் சென்றுவிட்டார். 1956 பெப்ருவரி 19-ல் குடும்பத்தினரோடு அம்மாவின் பிறந்தநாளைக் கொண்டாடினார் ஈடித். ஊழிய வாஞ்சையில் ஊறியிருந்த அம்மா மூத்தமகளை ஆனந்த பெருமிதத்தோடு அனுப்பினார் மார்ச் 1956-ல். அதே ஆண்டு ஆகஸ்ட் மாதம் இவ்வுலகில் தன் ஓட்டத்தை முடித்தார் ஈடித்தின் தாய் ஐடா பெர்ல் மார்கன்.

தாயையிழந்த துக்கம், தூரதேச வாசம், இவை இரண்டையும் சந்திக்க தடுமாறியதால், கோவில்பட்டியிலுள்ள லீலாவின் வீட்டிற்குச் சென்றார் ஈடித். சில நாட்கள் லீலா, பாக்கி வீட்டாரோடு செலவழித்தார் அதிர்ந்து போன ஈடித்திற்கு இவர்கள் குடும்பங்கள் கீலேயாத்தின் பிசின் தைலமாய் குணமளித்தது மட்டுமல்ல, ஓட்டத்தைத் தொடர வலுவையும், சிலுவையின் சிநேகத்தால் ஊட்டின. அன்பிற்கு மொழியோ இலக்கணமோ அவசியமில்லை. ஊழியத்தின் ஆரம்ப நாட்களில், லீலாவும் பாக்கியும் ஈடித்தை உற்சாகப்படுத்தி ஊக்குவித்த, யோசுவா காலேப் போன்ற உண்மைச் சீடர்கள். அழைத்த தேவனுக்கு உண்மையாயிருக்க மூவரும் சேர்ந்து ஜெபித்தனர். வேதத்தை ஆழமாய் ஆராய்ந்து படித்தனர். ஈடித்தின் உபவாச ஜெபங்களுக்கும், வேத ஆராய்ச்சிகளுக்கும், தனி ஜெபங்களுக்கும் ஈடுகொடுத்தனர். முதல் இந்திய VBS மங்கைகளான லீலாவும் பாக்கியும். இவ்விதம் பாளையங்கோட்டை (திருநெல்வேலி) VBS மலர ஆரம்பித்தது.

**- தொடரும்**

# துணுக்குகள்

## பாடல் பிறந்த கதை

***இயேசு நாதா! காக்கிறீர் [பாமாலை 316]***
***(Jesus, Saviour pilot me)***



***இயேசு நாதா! காக்கிறீர்,***
***இளைப்பாறச் செய்கிறீர்;***
***மோசம் நேரிடாமலும்,***
***பாதம் இடறாமலும்,***
***என்னைத் தாங்கி நிற்கிறீர்,***
***நேச நாதா! காக்கிறீர்.***

*'கர்த்தர் உன் போக்கையும், உன் வரத்தையும் ....... என்றைக்குங் காப்பார்'. சங் 121:8*

மனித வாழ்க்கை ஒரு கடல் யாத்திரையை ஒத்திருக்கிறது. முற்காலத்தில் பாய்மரக் கப்பல்களில் பிரயாணம் செய்பவர்கள், புயலினாலும், கடல் கொந்தளிப்பினாலும், கப்பல் பாறைகளில் மோதினதாலும், யாத்திரையில் பல இன்னல்களை அனுபவித்தனர். சரியான கருவிகளின்றிக் கப்பல் அடிக்கடி வழிதவறிச் செல்வதுமுண்டு. இதைப்போலவே, மனித வாழ்க்கையிலும், அடிக்கடிப் புயல்போன்ற இன்னல்களும், இன்னது செய்வதென்று தெரியாத திகைப்பும் குறுக்கிடுகின்றன. இயேசுபெருமானே எல்லாவித வாழ்க்கைப் புயல்களிலும் உறுதியான வழிகாட்டியாயிருந்து, இறுதியில் மோட்சக்கரை சேர்க்கிறார் என்பதை இப்பாடல் உணர்த்துகிறது.

அமெரிக்காவில் நியூயார்க் நகரின் கடற்கரையில், 'Church of Sea and Land' என்னும் பெயர்கொண்ட ஓர் ஆலயம் உண்டு. கப்பலோட்டிகளும், கப்பல் வேலையில் ஈடுபட்ட வேலையாட்களும் வெகுவாக இவ்வாலய ஆராதனைகளில் பங்கு கொள்வார்கள். அவர்கள் கப்பல் பிரயாணத்தை ஆரம்பிக்கும்முன்னரும், பிரயாணம் முடித்துத் துறைமுகம் வந்து சேர்ந்தவுடனும், தவறாமல் இவ்வாலய ஆராதனைக்கு வருவதுண்டு. 1871ம் ஆண்டு முதல் இவ்வாலயத்தில் எட்வர்ட் ஹாப்பர் (Edward Hopper) என்னும் போதகர், திருப்பணியாற்றிவந்தார். அவரது சபையாரில் அதிகமானபேர் கப்பல் வேலையாளரானதால், ஆராதனையில் வாசிக்கப்படும் திருமறைப்பகுதிகள், பாடப்படும் பாடல்கள், போதகர் ஆற்றும் அருளுரைகள், எல்லாம் கடல் யாத்திரையைக் குறித்தவையாகவும், கிறிஸ்துவே நிலையான வழிகாட்டி என்பதை உணர்த்துவதாகவும் இருந்தன. கடல் யாத்திரையில்

தங்களுக்கு நேரிட்ட பல ஆபத்துகளையும், கவலையான நிலைமைகளையும், கப்பலோட்டிகள் அடிக்கடி ஹாப்பர் போதகரிடம் சொல்வதுண்டு. ஆதலால், பிரயாணத்தின்போது அவர்கள் எப்போதும் பாடி ஆறுதல் பெறக்கூடிய ஒரு பாடல் எழுதப் போதகர் ஆவல்கொண்டு, ‘இயேசுநாதா காக்கிறீர்’ என்னும் பாடலை எழுதலானார். இப்பாடலை ஆங்கிலத்தில் பாடும்போது அதின் தாளம் (Rhythm), கப்பல் கடலில் மேலும் கீழும் ஆடிச் செல்வதையும், குழந்தையைத் தொட்டிலில் தாய் ஆட்டுவதையும் ஒத்திருக்கும். இப்பாடலை சபையார் வெகுவாகப் பாராட்டினர். அநேகருக்கு இப்பாடல் மனப்பாடமாகி, பிரயாணத்தில் எப்போதும் பாடிக்கொண்டிருந்தனர். முதல்முறையாக இப்பாடல் 1871ம் ஆண்டு, கப்பல் தொழிளாலருக்கான ஒரு மாதாந்திரப் பத்திரிகையில் (Sailor’s Magazine) பிரசுரிக்கப்பட்டு, அதே ஆண்டில் பாப்ட்டிஸ்ட் சபையாரின் பாட்டுப் புத்தகத்தில் (The Baptist Hymnal) சேர்த்துக்கொள்ளப்பட்டது.

இப்பாடலை எழுதிய எட்வர்ட் ஹாப்பர், 1816ம் ஆண்டு, பிப்ரவரி மாதம், 17ம் தேதி நியூயார்க் நகரில் பிறந்தார். நியூயார்க் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை முடித்து ஐக்கியத் திருமறைக் கல்லூரியில் ஆயர் பயிற்சி பெற்றார். நியூயார்க் வட்டாரத்தில் கிரீன்வில் (Greenville), சாக்ஹார்பர் (Sag Harbour) என்னுமிடங்களில் பதினோரு ஆண்டுகள் திருப்பணியாற்றியபின், 1871 முதல் கப்பல் தொழிலாளருக்கான Church of Sea and Land என்னும் ஆலயத்தில் பணியாற்றினார். இங்கிருக்கும்போதுதான், ‘இயேசுநாதா காக்கிறீர்’ முதலிய பல பாடல்களை எழுதினார். அவர் எழுதிய பாடல்களைத் தன் பெயரில்லாமலேயே பிரசுரித்தார். அவரது அரிய சேவையைப் பாராட்டி, 1871ல் லாபாயட் கல்லூரி அவருக்குப் பண்டிதர் பட்டத்தை (Doctor of Divinity) வழங்கியது. ஹாப்பர் போதகர் 1888ம் ஆண்டு, ஏப்ரல் மாதம், 23ம் தேதி, ஒரு பாடல் எழுதிக்கொண்டிருக்கும்போது, திடீரென மாரடைப்பால் காலமானார்.


கடந்த மாத தூது பத்திரிக்கைகளைப் படிப்பதற்கான இணைப்பு

# ஆலய பக்கம்

## ஆராதனை மற்றும் நிகழ்வுகள் அக்டோபர் – 2023



| தேதி | நாள் | நேரம் | நிகழ்வுகள் |
|---|---|---|---|
| 1 | ஞாயிறு | 12.00 am - 2.00 pm | உபவாச ஜெபக்கூடுகை - ஆயர் இல்லம் |
| | | 3.00 pm – 4.00 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் - ஆயர் இல்லம் |
| 3 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 6 | வெள்ளி | 6.30 pm – 8.30pm | Junior Church |
| | | 8.45 pm – 10.15pm | தூய திருவிருந்து ஆராதனை – St.Andrew's church |
| 9 | ஞாயிறு | 5.30 pm – 6.30 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் - முசாபா |
| 10 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 13 | வெள்ளி | 6.30 pm – 8.30pm | Junior Church |
| | | 8.45 pm – 10.15pm | தூய ஆராதனை – St.Andrew's church |
| 15 | ஞாயிறு | 7.00 pm – 8.00 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் & ஆண்கள் ஐக்கிய சங்கம் – ஆயர் இல்லம் |
| 17 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி |
| 20 | வெள்ளி | 6.30 pm – 8.30pm | Junior Church |
| | | 8.45 pm – 10.15pm | தூய திருவிருந்து ஆராதனை – St.Andrew's church |
| 22 | ஞாயிறு | 8.00 pm – 9.00 pm | வாலிபர் ஐக்கிய சங்கம் - ஆயர் இல்லம் |
| 24 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 27 | வெள்ளி | 6.30 pm – 8.30pm | Junior Church |
| | | 8.45 pm – 10.15pm | தூய ஆராதனை – St.Andrew's church |
| 31 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| | | 11.45pm | மாத இறுதி ஜெபம் - ஆயர் இல்லம் |




# BIBLE READING FOR CHILDREN – OCTOBER 2023


| DATE | BIBLE PORTION | |
|---|---|---|
| 1.10.23 | Acts | 4 :1 - 4 |
| 2.10.23 | Acts | 4: 5 - 10 |
| 3.10.23 | Acts | 4 : 11 - 16 |
| 4.10.23 | Acts | 4 : 17 - 20 |
| 5.10.23 | Acts | 4 : 21 - 24 |
| 6.10.23 | Acts | 4 : 25 - 30 |
| 7.10.23 | Acts | 4 : 31 - 37 |
| 8.10.23 | Acts | 5 : 1 - 4 |
| 9.10.23 | Acts | 5 : 5 - 11 |
| 10.10.23 | Acts | 5 : 12 - 16 |
| 11.10.23 | Acts | 6 : 17 -20 |
| 12.10.23 | Acts | 5 : 21 - 25 |
| 13.10.23 | Acts | 5 : 26 - 31 |
| 14.10.23 | Acts | 5 : 32 -37 |
| 15.10.23 | Acts | 5 : 38 -42 |
| 16.10.23 | Acts | 6 : 1 - 4 |
| 17.10.23 | Acts | 6 : 5 -10 |
| 18.10.23 | Acts | 6 : 11 -15 |
| 19.10.23 | Acts | 7 : 1 - 5 |
| 20.10.23 | Acts | 7 : 6 - 10 |
| 21.10.23 | Acts | 7 : 11 - 18 |
| 22.10.23 | Acts | 7 : 19 - 25 |
| 23.10.23 | Acts | 7 : 26 - 30 |
| 24.10.23 | Acts | 7 : 31 - 34 |
| 25.10.23 | Acts | 7 : 35 - 41 |
| 26.10.23 | Acts | 7 : 42- 45 |
| 27.10.23 | Acts | 7 : 46 - 53 |
| 28.10.23 | Acts | 7 : 54 - 60 |
| 29.10.23 | Acts | 8 : 1 - 6 |
| 30.10.23 | Acts | 8 : 7 - 12 |
| 31.10.23 | Acts | 8 : 13- 19 |

## தினசரி வேத வாசிப்பு பகுதிகள் - அக்டோபர் 2023




| தேதி | நாள் | காலை | மாலை |
|---|---|---|---|
| 1 | ஞாயிறு | உபாகமம் 2 : 14 -27 | அப்போஸ்தலர் 14 : 18 -28 |
| 2 | திங்கள் | உபாகமம் 2 : 28 -37 | அப்போஸ்தலர் 15 :1 -11 |
| 3 | செவ்வாய் | உபாகமம் 3 : 1 -14 | அப்போஸ்தலர் 15 : 12- 22 |
| 4 | புதன் | உபாகமம் 3: 15 -29 | அப்போஸ்தலர் 15 : 23 -41 |
| 5 | வியாழன் | உபாகமம் 4 : 1 - 14 | அப்போஸ்தலர் 16 : 1 -15 |
| 6 | வெள்ளி | உபாகமம் 4 : 15 -27 | அப்போஸ்தலர் 6: 16 : 28 |
| 7 | சனி | உபாகமம் 4 : 28 -40 | அப்போஸ்தலர் 6 : 29 -40 |
| 8 | ஞாயிறு | உபாகமம் 4 : 41 -49 | அப்போஸ்தலர் 17 : 1 -18 |
| 9 | திங்கள் | உபாகமம் 5 : 1 -21 | அப்போஸ்தலர் 17 : 19 -34 |
| 10 | செவ்வாய் | உபாகமம் 5 : 22- 33 | அப்போஸ்தலர் 18 : 1 - 16 |
| 11 | புதன் | உபாகமம் 6 : 1 - 12 | அப்போஸ்தலர் 18 : 17 -28 |
| 12 | வியாழன் | உபாகமம் 6 : 13 -25 | அப்போஸ்தலர் 19 : 1 -13 |
| 13 | வெள்ளி | உபாகமம் 7: 1 - 13 | அப்போஸ்தலர் 19 :14 -27 |
| 14 | சனி | உபாகமம் 7 : 14 -26 | அப்போஸ்தலர் 19 : 28 -41 |
| 15 | ஞாயிறு | உபாகமம் 8 : 1 -10 | அப்போஸ்தலர் 20 : 1 - 12 |
| 16 | திங்கள் | உபாகமம் 8 : 11 - 20 | அப்போஸ்தலர் 20 : 13 - 24 |
| 17 | செவ்வாய் | உபாகமம் 9 : 1 -14 | அப்போஸ்தலர் 20: 25 -38 |
| 18 | புதன் | உபாகமம் 9 : 15 - 29 | அப்போஸ்தலர் 21 :1 - 13 |
| 19 | வியாழன் | உபாகமம் 10 : 1 -11 | அப்போஸ்தலர் 21 : 14 -25 |
| 20 | வெள்ளி | உபாகமம் 10 : 13 - 22 | அப்போஸ்தலர் 21: 26 - 40 |
| 21 | சனி | உபாகமம் 11 : 1 - 15 | அப்போஸ்தலர் 22 : 1 -16 |
| 22 | ஞாயிறு | உபாகமம் 11 : 16 - 32 | அப்போஸ்தலர் 22 : 17- 30 |
| 23 | திங்கள் | உபாகமம் 12 : 1 - 16 | அப்போஸ்தலர் 23 : 1 -15 |
| 24 | செவ்வாய் | உபாகமம் 12 : 17 - 32 | அப்போஸ்தலர் 23 :16 - 35 |
| 25 | புதன் | உபாகமம் 13: 1 - 18 | அப்போஸ்தலர் 24 : 1 - 15 |
| 26 | வியாழன் | உபாகமம் 14 : 1 - 20 | அப்போஸ்தலர் 24: 16 - 27 |
| 27 | வெள்ளி | உபாகமம் 14 : 21 -29 | அப்போஸ்தலர் 25 : 1 -11 |
| 28 | சனி | உபாகமம் 15 : 1 - 15 | அப்போஸ்தலர் 25: 16- 27 |
| 29 | ஞாயிறு | உபாகமம் 15 : 16 - 23 | அப்போஸ்தலர் 26 : 1 -18 |
| 30 | திங்கள் | உபாகமம் 16 : 1 - 12 | அப்போஸ்தலர் 26 :19 -32 |
| 31 | **செவ்வாய்** | **உபாகமம் 16 : 13 - 22** | அப்போஸ்தலர் 27: 1 - 24 |

## ஆராதனை பாடல்கள் - அக்டோபர் 2023



| | |
|---|---|
| **06-10-23** | |
| பாமாலை - 15 | அலங்கார வாசலாலே |
| பாமாலை - 172 | சபையின் அஸ்திபாரம் |
| கீர்த்தனை – 264 | தேவனே இயேசு நாதனே |
| பாமாலை – 261 | எல்லாருக்கும் மா உன்னதர் |
| **13-10-23** | |
| பாமாலை - 10 | போற்றிடு ஆன்மமே |
| பாமாலை - 249 | நல் மீட்பர் பட்சம் நில்லும் |
| கீர்த்தனை – 333 | எங்கும் புகழ் இயேசு ராசனுக்கே |
| முடிவு கவிகள் – 4 | தெய்வ ஆசீர்வாதத்தோடே |
| **20-10-23** | |
| பாமாலை - 9 | பூலோகத்தாரே யாவரும் |
| பாமாலை - 267 | போற்றும் போற்றும் |
| கீர்த்தனை – 167 | நம்பி வந்தேன் மேசியா நான் |
| பாமாலை - 36 (1&2) | என்னோடிரும் மா நேச கர்த்தரே |
| **27-10-23** | |
| பாமாலை - 384 | யுத்தம் செய்வோம் வாரும் |
| பாமாலை - 328 | அஞ்சாதிரு என் நெஞ்சமே |
| கீர்த்தனை – 193 | எல்லாம் இயேசுவே |
| மங்கள கவிகள் - 2 | கர்த்தர் தந்த ஈவுக்காக |

## திருமறை பாட ஒழுங்குகள் - அக்டோபர் 2023

| தேதி | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்திப் பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 06-10-23 | ஆண்டவரின் ஆலயம் | *1 இராஜா. 8:22-30* | *1 பேதுரு* 2 : 1 - 10 | யோவான் *10:22-30* | - |
| 13-10-23 | இளையோரின் ஆன்மீக வாழ்வு | ஆதி. 41:37 - 43 | பிலி 3:1 – 12 | மத்தேயு 19:16-22 | 111 |
| 20-10-23 | சீர்திருத்தப்பட்ட திருச்சபை | 2 நாளா. 34 : 8-12 | வெளி. 2: 1 - 7 | யோவான் 2 :12 - 22 | - |
| 27-10-23 | இறையாட்சிக்கான இன்னல்களை ஏற்றல் | எஸ்தர் 4: 1 - 18 | எபி. 11:23 - 31 | மத்தேயு 10: 37 -42 | 46 |

## செவ்வாய் கிழமை - ஏரியா ஜெபக் குழுவிற்கான வேத பாடங்கள்

| நாள் | வேத பகுதி | | ஆயர் Schedule |
|---|---|---|---|
| 03-10-23 | சங்கீதம் | 109 | Hamdan |
| 10-10-23 | சங்கீதம் | 110 | Muroor |
| 17-10-23 | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி | | |
| 24-10-23 | சங்கீதம் | 111 | Musaafa |
| 31-10-23 | சங்கீதம் | 112 | TCA |

## BIRTHDAY - OCTOBER




| Birth Date | Title | Name |
|---|---|---|
| 1 | Mr. | Leslie Manohar Isaac. W |
| 1 | Mr. | J. Manuel Raj John |
| 2 | Mr. Dr. | Rajakumar Manickam |
| 2 | Mr. | Yesudian Nayagam Eban |
| 2 | Master | Godfrey Y |
| 3 | Ms. | Gabrilyn Hannah |
| 5 | Rev. | Samuel John Dinakaran |
| 5 | Master. | Hansi Jesinth Rajarigam |
| 6 | Mrs. | Sheeba Herlin. S |
| 6 | Mrs. | Melba Mercy Jeen |
| 7 | Master. | Camryn Robert Salin |
| 8 | Mr. | Ranjith Kumar. J |
| 9 | Mr. | Yuvesh Ray |
| 9 | Mr. | Prabhu Selvanayagam |
| 10 | Mrs. | Agila Shalini |
| 11 | Mrs. | Jebaseeli Idah Hannah |
| 11 | Mrs. | Hepsiba Jeni. M |
| 11 | Mrs. | Sujatha Ruban J |
| 11 | Ms. | Adora Mariam Glady |
| 13 | Miss | Diyas Dinesh |
| 14 | Master. | Abishek Samuel |
| 14 | Ms. | Gifty Chris |
| 15 | Master. | Kevin Paul Crishanth |
| 16 | Mrs. | Sheneegah Stanly |
| 17 | Mrs. | Vanitha Stella |
| 20 | Baby. | Alston Elvin Paul |
| 20 | Mrs. | Patricia Santhi L |
| 21 | Mr. | Benjemen Elengovan |
| 22 | Master. | Joshua Mahear |
| 22 | Ms. | Niwisha |
| 23 | Mr. | Ramesh Prabahardhas |
| 24 | Mr. | Selvin Franklin N |
| 28 | Mrs. | Sara Santhakumari Elengovan |
| 29 | Mrs. | Deena Gifty Nishanth |
| 30 | Mr. | Fernandez. J |
| 31 | Master | Eion Jayden |

## Wedding Anniversary – October




| Wedding Date | Title | Name |
|---|---|---|
| 2 | Mr. & Mrs. | Rajesh T |
| 2 | Mr. & Mrs. | Vivin Alfred |
| 21 | Mr. & Mrs. | Jose Wesly. J |

## புதிய அங்கத்தினர்களின் சேர்க்கை விவரம்




| S.No. | Name | Mem. No. |
|---|---|---|
| 1 | Mr. Shalin Justin Samuvel | 459 |
| 2 | Mr. Ebulin Rajakumar S | 460 |
| 3 | Mr. Denson Thangaiyan | 461 |
| 4 | Mrs. Preethi S | 462 |
| 5 | Mr. Danial Abraham | 463 |
| 6 | Mr. Jason Samuel J | 464 |

## NEW ARRIVAL



இதோ பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம். சங்.127.4a

| S.No. | Baby Name | Parent's Name |
|---|---|---|
| 1 | Austin Elroy Vigin | Mr. Vigin & Mrs. Annie |








CSI Tamil Parish
Abu Dhabi
JUNIOR
CHURCH
RETREAT
01 September 2023


Junior
Church
Retreat










# Ruwais Church Day



## TEACHERS' DAY SERVICE





Teach me to do thy will; for thou art my God: thy spirit is good; lead me into the land of uprightness.

PSALM 143:10 KJV